# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## இரண்டாம் வருட முதலாம் அரையாண்டிற்கான பொதுக் கலைமாணித் தேர்வு

## (2014 / 2015) January-February, 2018

ED 2122 கல்வித் திட்டமிடலும் அபிவிருத்தியும் (**Educational Planning and development**)

நேரம்: 02 மணித்தியாலங்கள்

பகுதி ஒன்றில் விரும்பிய இரு (02) வினாக்களுக்கும் பகுதி இரண்டில் விரும்பிய இரு (02) வினாவுக்குமாக மொத்தம் நான்கு (04) வினாக்களுக்கு விடை எழுதுக.

---

## பகுதி – I

1- அ) தீர்மானிக்கப்பட்ட குறிக்கோள்களைப் பயன்தரும் வகையில் அடைவதற்குத் திட்டமிடல் பங்களிப்புச் செய்யுமாற்றை அறிஞர்களின் வரைவிலக்கணங்களின் உதவியுடன் விளக்குக? (10 புள்ளிகள்)

ஆ) 1960 களிலிருந்து கல்வித்திட்டமிடலின் அடிப்படை அம்சங்கள் தொடர்பாகக் கல்வித்துறைத் தலைவர்களும் பொருளியலாளர்களும் முன்வைத்த அடிப்படை அம்சங்களைக் குறிப்பிட்டு உதாரணங்கள் மூலம் தெளிவுபடுத்துக? ($5X\ 2 = 10$ புள்ளிகள்)

2- அ)"முகாமைத்துவ செயற்பாடுகளில் திட்டமிடலானது ஒரு கூறாகவே செயற்படுகின்றது" இந்த வகையில் $D = f\ (P+M)$ என்ற சமன்பாட்டின் மூலம் திட்டமிடலுக்கும், முகாமைத்துவத்திற்கும் இடையேயுள்ள தொடர்புகளை ஆராய்க? (10 புள்ளிகள்)

ஆ) வெற்றிகரமான திட்டமிடல் ஒன்றைத் தயாரிக்கையில் கையாளக்கூடிய திட்டமிடல் முன் ஆயத்த நோக்கங்களைக் குறிப்பிட்டு விளக்குக? (10 புள்ளிகள்)

3- அ) இன்றைய காலச் சூழ்நிலையில் பாடசாலைகளில் நீர் அடையாளம் கண்டு கொண்ட தற்காலப் பிரச்சினை ஒன்றினை தீர்ப்பதற்கான திட்டவிளக்கத்தினை வரைக? (10 புள்ளிகள்)

ஆ) திட்டமிடல் அணுகுமுறைகளில் சமுதாயக்கேள்வி அணுகுமுறை என்பதால் நீர் விளங்கிக் கொள்வதனைக் குறிப்பிட்டு, இத்தகைய அணுகுமுறையின்படி திட்டமிடுவதால் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகளை ஆராய்க ? (10 புள்ளிகள்)

## பகுதி II

4- அ) பாடசாலைகளில் அதிபர், ஆசிரியர்கள் அதனுடன் தொடர்புடைய ஏனை பயனாளிகள் ஆகியோர் பாடசாலை மேம்பாட்டில் பங்குபற்றத்தக்க ஒருங்கிணை அணுகுமுறையே பாடசாலை மேம்பாட்டுத்திட்டம் (PSI) ஆகும். இத்திட்டத் மூலம் நிறைவேற்றப்படும் முக்கிய செயற்பாடுகளை உதாரணங்களுடன் ஆராய்க

(15 புள்ளிகள்

ஆ)"இலங்கையில் கல்வித்திட்டமிடலானது நிர்வாகப் பண்முகப்படுத்தல் அடிப்படையில் ஐந்து மட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது." இவ்வை மட்டங்களிலும் நிறைவேற்றப்படும் பணிகள் தொடர்பாக ஆராய்க?

(5X 3 = 15 புள்ளிகள்

5- அ) வருடம் தோறும் அதிபரால் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்படுகின்ற பாடசால அமுலாக்கத்திட்டம் பகுதி I, பகுதி II என்பவற்றினுள் உள்ளடக்கப்படு செயற்றிட்டங்கள் ஒவ்வொன்றையும் உதாரணங்கள் மூலம் விளக்குக? (15புள்ளிகள்

ஆ) பாடசாலையில் திட்டமிடலை மேற்கொள்ளும்போது கடைப்படிக்கப்படு திட்டமிடல் படிமுறைகள் ஆறினையும்(06) குறிப்பிட்டு அவை நடைமுறைப்படுத்தப்படும் விதத்தினை ஆராய்க?

(15 புள்ளிகள்

6- அ) இலங்கையின் பல பாகங்களிலும் கல்வி அபிவிருத்தியில் சமனற் நிலையையே இன்னும் காணக்கூடியதாக உள்ளது. இந்தவகையில் பிராந்திய ரீதியான கல்வி அபிவிருத்தியில் சமமின்மைக்குப் பங்களிப்புச் செய்யும் மக்கள் தொகை, கல்வியியற் காரணிகள், புவியியற் காரணிகள், அரசியற் காரணிகள் போன்றவை தொடர்பாக உமது பிரதேசத்தில் பெற்றுக் கொண்ட அனுபவங்களை மையமாக கொண்டு விமர்சனரீதியாக ஆராய்க?

(20 புள்ளிகள்

ஆ)கீழ் நோக்கிய மற்றும் மேல்நோக்கிய திட்டமிடல் (Top - Down and Bottom-Up Planning) மூலம் கல்வித்திட்டம் வெற்றி பெறுவதற்கு அதிகளவில் பயன்படுத்தப்படும் திட்டமிடலின் சிறப்பம்சங்கள் தொடர்பாகக் கருத்துரைக்குக?

(10 புள்ளிகள்)

மொத்தப்புள்ளிகள் - 100 (பகுதி I - 40, பகுதி II – 60)